**செய்தி வெளியீடு எண் : 656** **நாள் : 05.04.2023**

## செய்தி வெளியீடு

## சென்னையில் தேசிய கைத்தறி கண்காட்சி – 2023
## தொடக்க விழா

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேசிய கைத்தறி கண்காட்சி விற்பனையை தொடங்கி வைத்து புதிய இரகங்களை அறிமுப்படுத்தினார்.**

தேசிய கைத்தறி கண்காட்சி 2023 (National Handloom Expo – 2023) விற்பனை தொடக்க விழா சென்னை பாந்தியன் சாலையில் உள்ள கோ–ஆப்டெக்ஸ் கண்காட்சி திடலில் இன்று (05.04.2023) நடைபெற்றது.

தேசிய கைத்தறி கண்காட்சி விற்பனையைத் தொடங்கி வைத்து காஞ்சிபுரம், ஆரணி, கோயம்புத்தூர், சேலம், மதுரை பருத்தி நெசவாளர்கள் உற்பத்தி செய்த பட்டு மற்றும் பருத்தி சேலை இரகங்களை புதிய வடிவமைப்புகளாக அறிமுகப்படுத்தி விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேருரையாற்றினார்.

அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது :–

இந்த கைத்தறி கண்காட்சியில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், சென்ற ஆண்டு நடந்த தேசிய கைத்தறி கண்காட்சியிலும் நான் கலந்து கொண்டேன் இந்த ஆண்டும் கலந்து கொண்டுள்ளேன் தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கொடுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துறையின் அமைச்சர் அவர்களுக்கும் கோ–ஆப்டெக்ஸை சேர்ந்த அதிகாரிகளுக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

National Institute of Design மற்றும் National institute of Fashion Technology ஆகியவை இணைந்து கொடுத்த 500 டிசைன்களின் அடிப்படையில் உருவான பட்டு மற்றும் காட்டன் சேலைகள் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது சிறப்புக்குரியது,

நம்முடைய தந்தை பெரியார் அவர்களும் அவரின் கீழ் இயங்கிய நம் தலைவர்களும் கைத்தறி பொருட்களை தலையில் சுமந்து விற்பனை செய்த வரலாறும் நமக்கு உண்டு,

இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வாரத்தில் 2 நாட்கள் அரசு அலுவலர்கள் கைத்தறி உடுத்தி கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்க

வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்கள். அதே கோரிக்கையினை நானும் வலியுறுத்துகிறேன்.

இந்த நேரத்தில் எங்கள் துறை சார்பாகவும் ஒரு கோரிக்கையை யோசனையை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கோ–ஆப்டெக்ஸ், தமிழ்நாடு முழுவதும் இருக்ககூடிய 1200 கூட்டுறவு சங்கங்கள் மூலம் பொருட்களை கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகின்றன,

இந்த ஆண்டு மட்டும் 200 கோடியே 92 லட்சம் ரூபாய் அளவு கோ–ஆப்டெக்ஸ் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. இது கடந்த ஆண்டினை விட 29 கோடி ரூபாய் அதிகம்.

முந்தைய ஆட்சியின் போது 7 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிய இந்த நிறுவனம் இன்றைக்கு 9 கோடியே 46 இலட்சம் ரூபாய் லாபத்தில் இயங்குகிறது.

இந்த 23–மாதங்களிலும் தமிழ்நாடு அரசால் நெசவாளர்களுக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 10–ஆண்டுகளாக செயல்படாமல் இருந்த காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப்பூங்கா புத்துயிர் பெற்றுள்ளது. நெசவாளர் குறைதீர்க்கும் மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ் 24,684– பயனாளிகளுக்குரூபாய். 120.80 கோடி கடன்கள் வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது. 10–ஆண்டுகளுக்கு மேல் சிறப்பு முறை கால ஊதியம் பெற்று பணிபுரிந்து வந்த 406–தற்காலிக பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

முதல்முறையாக எப்போதும் இல்லாத வகையில் அடிப்படைக் கூலியில் 10%அகவிலைப்படியில் 10%உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.இதனால் 1–இலட்சம் நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர். நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரிந்து வரும் 1033–நிரந்தரப்பணியாளர்களுக்கு 15% ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. வேட்டி–சேலை திட்டம் மற்றும் சீருடை. வழங்கும் திட்டங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி 10% முதல் 30% வரை ரூபாய். 4.40 கோடி அளவிற்கு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 42–இலட்சம் மாணவ–மாணவியர்களுக்கு சீருடைத் துணிகள் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூ. 4.00இலட்சமாக உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்….! இவை அனைத்தும் 20–மாத காலத்தில் செய்து தரப்பட்ட திட்டங்கள் ஆகும்.

மகளிர் சுய உதவிக்குழுக்கள் தமிழ்நாடு முழுக்க எண்ணற்ற பொருட்களை குறிப்பாக கைவினை பொருட்களை தயாரித்து வருகிறார்கள் அதையும் நீங்கள் வாங்கி விற்பனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் – பொது மக்கள் அனைவரும் கைத்தறி ஆடைகளை அதிக அளவில் வாங்கி பயன்படுத்தி நெசவாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

சென்னை கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி வளாகத்தில், ஒன்றிய அரசு ஜவுளி அமைச்சகத்தின் கைத்தறி வளர்ச்சி ஆணையரகத்தின் நிதி உதவியுடன், கைத்தறி துணி வகைகளின் விற்பனையினை அதிகரிக்க 05.04.2023 இன்று இந்திய கைத்தறிக் கண்காட்சி 2023 விற்பனை தொடங்கி உள்ளது.

இந்த கண்காட்சி ஏப்ரல் மாதம் 18ஆம் தேதி வரை அனைத்து நாட்களிலும் காலை 11.00 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் நடைபெறும்.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இக்கண்காட்சியில் கலந்து கொண்டு, தங்களது உற்பத்தி இரகங்களான பட்டு மற்றும் பருத்தி சேலைகள், இல்லத்திற்கு தேவையான துணி வகைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் அனைத்து விதமான துணி இரகங்களை, சென்னை மற்றும் புற நகரங்களில் வசிக்கும் வாடிக்கையாளர்கள் ஒரே இடத்தில் வாங்கும் வண்ணம் இந்த கண்காட்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என பாராட்டியுள்ளார். பல வண்ண நிறங்கள் மற்றும் வடிவமைப்புகள் கொண்ட கைத்தறி துணி இரகங்கள் வாடிக்கையாளர்களை கவரும் வண்ணம் இந்த கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள பெரும்பாலான மாநிலங்களில் உற்பத்தியாகும் தனித்துவமான துணி இரகங்கள் வாடிக்கையாளர்களின் எண்ணத்தையும், கருத்தையும் கவரும் வண்ணம், கண்காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளது.

இத்தேசிய கைத்தறி கண்காட்சியில் 105 விற்பனை அரங்குகளில் ஜம்மு காஷ்மீர், உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத், பீகார், ஜார்கண்ட், இராஜஸ்தான், மேற்கு வங்காளம், ஆந்திர பிரதேசம், தெலங்கானா மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு கலந்து கொண்டு தங்களது உற்பத்தி இரகங்களான பட்டு மற்றும் பருத்தி சேலைகள், இல்லத்திற்கு தேவையான துணி இரகங்களை பல வண்ண நிறங்கள் மற்றும் வடிவமைப்புகளில் வாடிக்கையாளர்களை கவரும் வண்ணம் விற்பனைக்கு வைத்துள்ளன.

இவற்றுடன் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்துள்ள தமிழ்நாட்டின் பாரம்பரிய மற்றும் நெசவு நுணுக்கங்களை வெளிப்படுத்தும் பட்டு, பருத்தி சேலைகள், படுக்கை விரிப்புகள், கைலிகள், வேட்டிகள், துண்டுகள் மற்றும் ஏற்றுமதி இரகங்கள்

உள்ளிட்ட அனைத்து இரகங்களும் இக்கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த விழாவிற்கு தலைமை வகித்த மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்கள் கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி வளாகத்தில் அமைந்துள்ள "ஸ்டைலிஸ் & ஸ்டிச்சிங் யூனிட்" என்ற தையல் கூடத்தை திறந்து வைத்து பேருரையாற்றினார்

656

இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களும் மற்றும் மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களும் 2022–23 ஆம் ஆண்டிற்கான திறன்மிகு நெசவாளர் விருது 60 கைத்தறி நெசவாளர்களுக்கும், சிறந்த வடிவமைப்பாளர்கள் விருது 3 வடிவமைப்பாளருக்கும் வழங்கி கௌரவித்து முன்னிலையுரை ஆற்றினார்கள்.

மேலும் வணக்குத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், மதிப்பிற்குரிய மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதிமாறன் அவர்கள், மதிப்பிற்குரிய எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள் மதிப்பிற்குரிய பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு.எம் மகேஷ் குமார் அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி 61 – வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி பாத்திமா முசாபர் அஹமது அவர்கள் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இவ்விழாவில் அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்

கைத்தறித்துறை ஆணையர் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு. த. பொ. ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்றினார்கள். இவ்விழாவில் துறை அலுவலர்கள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பெருந்திரளாக விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in